# கோலாலம்பூரின் மக்கள்தொகை 88 லட்சம்

கோலாலம்பூர், ஆக. 8-

கோலாலம்பூர் மாநகரின் மக்கள்தொகை எண்பத்தெட்டு லட்சத்தை கடந்துள்ளது என்று கூட்டரசு பிரதேச அமைச்சர் டாக்டர் ஜலீஹா முஸ்தாபா தெரிவித்துள்ளார். வரும் 2030ஆம் ஆண்டுக்குள் அம்மாநகரின் மக்கள் தொகை தொண்ணூற்று எட்டு லட்சத்தை



எட்டும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். மக்கள்தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதால். திட்டமிடல் பணியை மேற்கொள்வதிலும் உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதிலும் கோலாலம்பூர் மாநகர் மன்றம் இன்னும் முனைப்புடன் செயல்பட வேண்டும். மாநகர் பகுதிகளில் தற்போது வசித்துவரும் மக்களின் எண்ணிக்கை இயல்பாக அதிகரித்து வந்தாலும், கிராமப்புறங்களிலிருந்தும் ஏராளமானோர் கோலாலம்பூரில் குடியேறி வருகின்றனர் என்றார் டாக்டர் ஜலீஹா.